30—3—1973 (Friday)	... ...	1. Reply by the Hon. the Chief Minister to the Debate on Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 ; and 2. Consideration of other Official Bills.
31—3—1973 (Saturday)	... ...	Consideration of Official Bills.
1—4—1973 (Sunday)	... ...	Holiday
2—4—1973 (Monday)	... ...	Consideration of Official Bills.

The Council will meet on 3rd April 1973, if necessary. The Council will meet from 4 p.m. to 7 p.m. daily.

3. கவன ஈர்ப்பு.

விக் இந்தியா தொழிற்சாலேயில் தொழிலாளர்கள் சம்பளம் வாங்காத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது குறித்து.

திரு. காட்டூர் கோபால் : தலேவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனின் ஓர் அங்கமாகிய விக் இந்தியா தொழிற்சாலேயில் தொழிலாளர்கள் சம்பளம் வாங்காத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது குறித்தும், இது குறித்து மத்திய அரசினரை வலியுறுத்தி வழிவகை கண்டிட வேண்டும் என்பது குறித்தும்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலேவரவர்களே, விக் இந்தியா தொழிலாளர் சங்கம் கீழ்க்கண்ட மூன்று கோரிக்கைகளே எழுப்பியுள்ளது:—

1. சம்பளம், பஞ்சப்படி மாற்றம் உள்பட பொதுக் கோரிக்கைகள்.

2. உடன்பாடு ஏற்படும்வரை தொழிலாளர்களுக்கு ரூ. 50 தற்காலிக நிவாரணம் அளித்தல்.

3. கோரிக்கைகளின் மீது தீர்வு காணும்வரை விழா முன்பணம் பிடித்தத்தை ஒத்திப்போடுதல்.

மேற்கூறிய கோரிக்கைகளின்மீது நிறுவனத்திற்கும் சங்கத்திற்கும் இடையே எந்தவிதமான உடன்பாடும் ஏற்படாததால், இதன் 600 தொழிலாளர்கள் (500 ஆண்கள், 100 பெண்கள்) பிப்ரவரி மாத ஊதியத்தை மார்ச் திங்களில் வாங்க மறுத்தனர். நிர்வாகத்தினருடன் மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்திய பிறகு சங்கம் தொழிலாளர்களை பிப்ரவரித் திங்களுக்கான ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளும்படிச் செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டது. சங்கத்தின் தலைவர்கள் வேண்டுகோளுக்கிணங்க தொழிலாளர்கள் 26—3—1973 தேதியன்று ஊதியத்தைப் பெற்றுக்கொண்டனர். சங்கம் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து முன் பணமாகப் பெற்ற தொகையை பிடித்துக்கொள்ள ஒப்புக்கொண்டது. மேலும் இரு தரப்பினரும் இதர கோரிக்கைகளைக் குறித்து பேச்சு வார்த்தை நடத்த ஒப்புக் கொண்டனர்.

4. அரசினர் தீர்மானம்.

பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குச் சட்ட மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அரசினர் தீர்மானத்தினை முன் மொழிந்து சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன்:—

"பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு எனப்படும், பேரவையின் குழு ஒன்று இருபத்தோரு உறுப்பினர்களைக்கொண்டு அமைக்கப் படவிருக்கின்றது. அவர்களில், பதினாறு உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களை, பேரவை, தனது உறுப்பினர்களிலிருந்து, ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்கத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களை, இக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக, சட்ட மன்ற மேலவை, தனது உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஆனால், முதற் குழுவின் உறுப்பினர்கள், நேர்வுக்கேற்ப சட்டப் பேரவைத் தலைவர் அல்லது சட்ட மன்ற மேலவைத் தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(2) இக்குழுவின் உறுப்பினர்கள், ஓராண்டுக் காலத்திற்கு அல்லது புதிய குழு அமைக்கப்படும் வரை பதவி வகிப்பார்.